புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# பட்டினப்பாலையில் பழந்தமிழரின் பண்பாடு

முனைவர் அ. ஜெயா எஸ்கிலின்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மகளிர் கிறிஸ்தவக் கல்லூரி, நாகர்கோவில் -1

பண்பாடு என்பது பண்பட்ட நிலை. எல்லாருடைய இயல்புகளும் அறிந்து ஒத்து நன்னெறியில் ஒழுகுபவர் பண்பாடு உடையவர் ஆவர். "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்" என்கிறது கலித்தொகை. எண்ணம் சொல் செயல் ஆகியவற்றால் எவர்க்கும் கேடு விளைவிக்காத தன்மையைப் பண்பாடு எனலாம். உருவத்தால் மட்டும் ஒருவன் மனிதனாகி விடமுடியாது. மாறாக சமுதாயம் போற்றும் பண்பைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதை வள்ளுவரும்

உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு (குறள் 993)

என்கிறார். மற்ற உயிர்களிடமிருந்து மனிதன் வேறுபாடுவதற்குக் காரணம் பகுதறிவாகும். இங்கு பகுத்தறிவு என்பதற்குப் பதிலாக பண்பறிவு என்பது பொருத்தமானது. பட்டினபாலையில் தமிழரின் பண்பாடுக் குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பத்துப்பாட்டில் ஒன்பதாவது நூல் பட்டினபாலை ஆகும். இது மொத்தம் 301 வரிகளைக் கொண்டது. பாலைத்திணையின் உரிப்பொருளான பிரிவுத்துன்பம் இதற்கு கருவாகும்.

இதனை இயற்றியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். பட்டினப்பாலை என்னும் பெயரில் உள்ள பட்டினம் என்னும் சொல் சோழரது தலைநகரமாகவும், துறைமுகப்பட்டினமாகவும் இருந்த காவிரிப் பூம்பட்டினத்தைக் குறிப்பதாகும். பாலை என்னும் சொல், பிரிவு என்னும் பொருளைத் தருவது. காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறப்பித்துப் பாலைத் திணையில் அமைந்தமையால், இப்பாட்டுப் பட்டினப்பாலை எனப்பெயர் பெற்றது. இந்த பட்டினப்பாலைப் பாடியதற்காகக் கடியலூர் உருத்திரங் கண்ணனாருக்குக் கரிகாற் சோழன், பதினாறு நூறாயிரம் பொன் பரிசிலாக வழங்கினான் என்பது கலிங்கத்துப் பரணியினால் தெரிகின்றது. பதினாறு கோடி பொன் பரிசிலாக வழங்கினான் என்று சங்கரசோழன் உலாவும், தமிழ்விடு தூதும் கூறுகின்றன. பட்டினப் பாலைக்குப் பரிசிலாகக் கொடுக்கப்பட்டது, முத்தும், வயிரங்களும் இழைத்த பதினாறு பொன் தூண்களை உடைய ஒரு மண்டபம் என்றும், இப்பட்டினப் பாலை அரங்கேறிய இந்த மண்டபம், தமிழ் ஆக்கத்திற்கு இடமாய் இருந்தமை கருதி, மூன்றாம் இராசராசன் காலத்தில் சோழ நாட்டின் மீது படையெடுத்து வந்த மாறவாமன் சுந்தர பாண்டியன் இம்மண்டத்தினை இடிக்காமல் சென்ற குறிப்பு, திருவெள்ளறைக் கல்வெட்டு செய்யுள் ஒன்றினால் தெரிகிறது. (பத்துப்பாட்டு வளம் லெ. பா. கரு. இராமநாதன் செட்டியர், பக். 85) சோழர்களின் தலைநகரமாகிய காவரிப்பூம்பட்டினத்தின் வரலாற்று நூலாக, இப்பாட்டு விளங்குகின்றது. இந்த காவரிப்பூம்பட்டினம் கடலால் கொள்ளப்பட்டமையால் அப்பெருநகரினை இழந்துவிட்டோம். அந்த நகரம் இப்போது ஒரு சிற்றூராக உள்ளது. ஆயினும் இவ்வூரில், பழைய பெரு நகரம் இருந்ததற்குரிய அடையாளங்கள் உள்ளன. இந்த காவரிப் பூம்பட்டினத்தின் இயல்பு சிலப்பதிகாரத்தில் விரிவாகவும் சிறப்பாகவும் கூறப்பட்டுள்ளது.

*அகப்பொருள் காட்சி*

*"பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்பதைத் தெளிவாக உணர்ந்த தலைமகன் பொருளீட்டப் புறப்படத் தயாராகிறான். அந்த நேரத்தில் பிரிதலால் வாடி வருந்துகின்ற தலைவியின் துன்பநிலை அவனது மனக்கண்ணில் நிழலாடுகிறது. உயிரினும் மேலான அன்பு துணைவியைத் துன்பத்தில் ஆழ்த்துதற்கு அவன் மனம் உடன்படவில்லை. அயல் நாட்டிற்குச் செல்லுகிற காட்டு வழியோ கரிகாலன் தனது பகைவர் மீது எறிகிற வேலினும் கொடுமை நிறைந்த்து. ஆனால் என் தலைவியின் மென்மையான தோள்கள் கரிகாலனின் செங்கோலை விடவும் இனிமையானவை. எனவே பொருள் தேடுகிற முயற்சியில் காவிரி பூம்பட்டினமே கிடைப்பதாயினும் என் தலைவையைப் பிரிந்து செல்லமாட்டேன் என்று கூறுகிறான்.*

> *"முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்*
> *வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய*
> *வாரேன்"           (பட்டினப்பாலை 217 – 219)*

*என்னும் உறுதிக்கு வருகிறான். இது தான் பட்டினப்பாலை தரும் அகப்பொருள் காட்சியாகும். இந்த அகப்பொருள் காட்சியை உருவாகக் கொண்டு காவிரிப் பூம்பட்டினத்துச் சிறப்புகளையும் கரிகால் பெருவளத்தானின் அருமை பெருமைகளையும் கருவாகக் கொண்டு நிற்பது தான் பட்டினபாலை (இலக்கிய ஆய்வில் புதிய பார்வைகள், டாக்டர் கு. மோகனராசு, பக். 52)*

*ஏற்றத்தாழ்வு*

*செல்வவளம் மிக்கோரின் மனைகள் மாடியும், நிலா முற்றமும் கொண்டு விளங்கின. ஏழைகளின் வீடுகள் வைக்கோலாலும், தழையாலும் வேயப்பட்ட குடிசைகளாக இருந்தன. அரசர்கள் வாழும் இல்லங்கள் மலைக் கணவாய் போன்ற வாயில்களைக் கொண்டு கம்பீரமாக விளங்கின. நெல்லை உண்ண வந்த கோழியைக் குழைக் கொண்டு எறியும் அளவிற்கு பொன்னும், பொருளும் ஒரு புறம் காணப்பட்டது. குப்பைக் கிரையை உப்பின்றி வேக வைத்து உண்ணும் அளவிற்கு வறுமையும் மறுபுறம் காணப்பட்டது. வறுமையுற்று வந்தாரை பேணும் சமுதாய மனவளம் இந்த இடைவெளிக்கு இணைப்புப் பாலம் இட்டது.*

*உள்நாட்டு வாணிகம் உறவு*

*மூலை முடுக்குகளில் எல்லாம் பட்டித் தொட்டிகளில் எல்லாம் முழங்கும் எழுச்சி முழக்கங்களும் சீர் மிகு எண்ணங்களும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே செயல் உருப்பெற்றுச் செயறப்பட்டன என்பதற்கு சான்றுகளாக காவிரிப் பூம்பட்டினத்து துறை முகத்தைக் கூறலாம். இந்திய மண்ணின் பல பகுதிகளிலிருந்தும் வண்டிகளில் வந்து இறங்கிய மிளகு மூட்டைகள், இமயமலைப் பகுதிகளிலிருந்து கொண்டுவரப்பட்ட இரத்தினங்கள், பொன் கட்டிகள், குடகு மலையிலிருந்து வந்திறங்கிய சந்தனக் கட்டைகள், அகிற் கட்ட்டைகள், பாண்டிய நாட்டு முத்துக் குவியல்கள், கீழைக்கடல் பவளங்கள், கங்கைக் கரையில் விளைந்த விளைப்பொருள்கள் காவரி தந்த விளைபயன்கள் இப்படி மலையெனக் குவிந்து கிடக்கின்றன.*

> *"காலின் வந்த கருங்கரி மூடையும்*
> *வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்*
> *குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்*
> *தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்*
> *கங்கை வரியும் காவரிப்பயனும்" (பட்டினப்பாலை 186 – 190)*

*இவற்றை எல்லாம் ஏற்கும் வகையில் மக்கள் மனங்கள் விரிந்து கிடக்கின்றன. இது உள்நாட்டு வணிகம் தந்த இந்திய ஒருமைப்பாட்டுக்கு திறவுகோலாக அமைந்துள்ளது.*

*உலக ஒருமைப்பாட்டு உறவு*

*இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் நாட்டினர் வேறு பல நாட்டினருடன் வாணிகம் செய்தனர். வேறுபல மொழியினருடன் பழகி வந்தனர். வேறு பல நாட்டினரும் தமிழகத்திற்கு வந்து போயினர். தமிழர் அவர்களோடு மொழி வெறுப்பு இனவெறுப்பு இல்லாமல் ஒன்றாக அன்புடன் பழகினர். காவிரிபூம்பட்டினத்தின் வளத்தையும் சிறப்பையும் கருதி அங்கே பல நாட்டினர் வந்து குழுமி இருக்கின்றனர்.*

*“மொழி பல பெருகிய பழிதீர்தே எத்து*
*புலம் பெயர் மாக்கள் கலந்து இனிது – உறையும்*
*முட்டாச் சிறப்பின் பட்டினம்”       (பட்டினப்பாலை 216-218)*

*இவ்வடிகள் மூலம் செல்வமும் செழிப்பும் நிறைந்த காவரிப்பூம்பட்டினத்தில் பல நாட்டினர் வந்து குடியேறுவதைப் புலப்படுத்துகிறது.*

*அரேபியா போன்ற வெளிநாடுகளிலிருந்து கடல் கடந்து வந்த குதிரைகள், ஈழத்திலிருந்து வந்து உணவுப் பொருள், பர்மாவிலிருந்து வந்த பல செல்வப் பொருள்கள் ஒன்றோடு ஒன்று கலந்து கிடக்கின்றன.*

*“நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்”*
*“ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்*
*அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி*
*வளம்தலை மயங்கிய நனம்தலை மறுகு”(பட்டினப்பாலை 185, 190-193)*

*இவை வெளிநாட்டு வாணிபம் தந்த உறவாகவும் உலக ஒருமைப்பாட்டு உணர்வுக்கான முத்தான வரிகளாக இப்பாடலடிகள் விளங்குகின்றன.*

*காவரிப் பூம்பட்டனத்தில், வாணிகமும், வளமும் சிறந்திருந்தமையால், வேறு வேறு மொழிகள் பேசும் பல நாட்டு மக்கள் தம் நாட்டை விட்டு வந்து, இந்நகரில் உள்ள மக்களோடு கூடி இன்பமாக வாழ்ந்தனர் என்பது இப்பாட்டினால் தெரிகின்றது.*

*சுங்கக் காவல்*

*இக்காலத்திலிருப்பதைப் போலவே பண்டைக் காலத்திலும் இறக்குமதிப் பொருள்களுக்கும், ஏற்றுமதிப் பண்டங்களுக்கும் அரசாங்கம் வரி விதித்து வந்தது. இவ்வரிக்கு உல்கு, சுங்கம் என்ற பெயர்கள் வழங்கின. இத்தகைய வரியே அரசாங்கத்தின் முக்கிய வருமானம் (பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும், சாமி சிதம்பரம், பக். 171)*

*காவரிப்பூம் பட்டினத்துக் கடற்கரைத் துறைமுகத்தினை அடுத்துள்ள பண்டசாலைகளில், கப்பலிலிருந்து நிலத்தில் இறக்கப்படுவனவும், நிலத்திலிருந்து கப்பலில் ஏற்றப்படுவனவும் ஆகிய அளவில்லாத பண்டங்கள் மலை போலக் குவிந்து கிடந்தன. அரனுக்குரிய வருவாயைப் பாதுகாக்கும் காவலர்கள், இரவும் பகலும் ஓய்வில்லாமல் அப்பண்டங்களுக்கெல்லாம் சோழ அரசனுடைய புவி முத்திரையிட்டுப் பண்டங்களின் அளவிற்கு ஏற்பச் சுங்கம் வாங்கினர்கள்.*

*“நீரினின்று நிலத்தேற்றவும்*
*நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்*
*அளந்தறியாப் பல பண்டம்*
*வரம்பறியாமை வந்தீண்டி*
*அரும்கடிப் பெரும்காப்பின்*
*வலியுடை வல் அணங்கினோன்*
*புலிபொறித்துப் புறம்போக்கி” (பட்டினம்பாலை 129 – 135)*

*காவரிப்பூம்பட்டினத்துக்கு கடல் துறையில் இறங்கும் பண்டங்களுக்கும் சுங்கவரியுண்டு. ஏற்றுமதி செய்யப்படும் பண்டங்களுக்கும் சுங்கவரியுண்டு. நிலத்திலிருந்து வந்த பண்டங்களும், நீர் வழியாக வந்த பண்டங்களும் முதலில் சுங்கச் சுவடிக்குள் அனுப்பப்படும். பண்டங்கள் திருட்டுப் போகாமல் இருக்க சுங்கச்சாவடி பாதுகாக்கப்பட்டன.*

*வணிக செம்மல்கள்*

*வணிகர்கள், தம் பொருள்களையும், பிறர் பொருள்களையும் ஒப்ப நினைத்தனர். தாம் கொடுக்கும் பண்டத்தின் மதிப்பிற்கு மிகுதியாகப் பொருள்களைக் கொள்ள மாட்டர்கள்,*

கொள்ளும் பொருளுக்குக் குறையப் பண்டங்களைக் கொடுக்கவும் மாட்டர்கள். இலாபத்தை வெளிப்படையாகச் சொல்லி விற்பர்கள். இம்முறைகளை மேற்கொண்டமையால், பெரும் பொருள் ஈட்டினர் என்ற குறிப்பு இப்பாட்டில் உள்ளது. இதனால், அக்கால வணிகர்கள் நடுவுநிலை தவறாத நல்ல மனமும், பொய் கூறாதவர்களாய், அறநெறி வழுவாது வாழ்ந்தமையை விளக்குகின்றது.

இந்த வணிக உறவுக்கு உரமூட்டியது, சோழ மண்ணில் நிலவிய சூழ்ச்சியும் சுரண்டலும் அற்ற, பதுக்கலும் பாழ்நெறியும் அற்ற, கரவும் கலப்படமும் அற்ற நேர்மையான வாணிகம் தான் காரணமாக இருந்தது.

அங்கிருந்த வாணிகர்கள்,

"வாணிகசெய்வோர்க்கும் வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்" (குறள். 120)

என்னும் வள்ளுவரின் நெறிக்கு ஏற்ப, "தமவும் பிறவும் ஒப்ப நாடி" வாணிகம் செய்தவர்கள்.

"கொள்வதும் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது
பல்பண்டம் பகிர்ந்து வீசும்
தொல் கொண்டி துவன்று இருக்கை" (பட்டினப்பாலை 210 – 212)

என வாழும் வணிகச் செம்மல்கள் பண வரவை விட செம்மையான வாழ்வை பெரிதாக்க் கருதியவர்கள். இவ்வியல்புகள் பண்டைத் தமிழ் மக்களின் தலைசிறந்த பண்பினைக் காட்டுவதாகும்.

குடிமக்கள் அறப்பண்புகளைக் கடைபிடித்து வாழ்ந்தனர். அறத்தின் வழியில் நின்று முயன்று தேடுவதே இன்பம் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டனர். சங்க கால தமிழகத்தில் அந்தணர், அரசர், வணிகர், மருத்துவர், பாணர், கோவலர் என்று பல இனக்குழுக்கள் அவரவர்ச் செய்யும் தொழிலின் அடிப்படையில் செயல்பட்டனர். இவர்களுக்குள்ளே தீண்டாமை என்னும் கொடுமைக் காணப்படவில்லை.

கொடிகளின் சிறப்பு

கொடிகளின் அடையாளத்தை கொண்டே பல இடங்களையும், பல வகையான நிகழ்ச்சிகளையும் தெரிந்து கொள்வது பண்டைகால வழக்கம். இக்காலத்தில் விளம்பர பலகைகளைப் பயன்படுத்துவது போல அக்காலத்தில் இதற்கு பதிலாக கொடிகளையே பயன்படுத்தினர். காவிரிப் பூம்பட்டினத்திலே எங்கு பார்த்தாலும் பல வகையான கொடிகள் பறந்துக்கொண்டிருந்தன.

காவிரிப்பூம்பட்டினத்தில் கடவுளர்க்கு நடைபெறும் திருவிழாக்கள் குறித்துக் கட்டப் பெற்ற கொடிகளும், விலைப் பண்டங்களை அறிவித்ததற்குக் கடைகள் தோறும் கட்டப் பெற்ற கொடிகளும், பல நூல்களையும் கற்ற நல்லாசிரியர்கள், பிறரோடு வாது செய்யக் கருதிக்கட்டிய கொடிகளும், வேறு பல பெருங்கொடிகளும் விளங்கின என்னும் செய்தி இப்பாட்டில் காணப்படுகின்றது. கடைத்தெருவில், ஒவ்வொரு கடையிலும் இன்ன இன்ன பொருள்கள் விற்கப்படுகின்றன என்பதை அறிவிக்கக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன என்னும் செய்தி, இப்பட்டினப்பாலையில் கூறப்பட்டிருப்பதால், பொருள்களை வாங்குவோர், தமக்கு வேண்டிய பொருள்கள் கிடைக்கும் கடை எது என அறிந்து கொள்வதற்கு உதவியாக, இக்கொடிகள் கட்டப்பட்டன என்பது தெரிகின்றது. இக்காலத்தில் கடைகளில் விற்கப்படும் பொருள்கள் இவை என்பதை உணர்த்தப் பெயர்ப் பலகைகள் இருப்பதைப் போல அக்காலத்தில் கொடிகள் இருந்தன.

"பிற பிறவும் நனி விரைஇ
பல்வேறு உருவின் பதாகை நீழல்

*செல்கதிர் நுழையாச் செழுநகர் வரைப்பின்" (பட்டினப்பாலை 181-183)*

*வெவ்வேறு காரணங்களுக்காகக் கட்டப்பட்ட கொடிகளும் தம்முள் கலந்ததால் கதிரவனின் கதர்கள் அவற்றிடையே நுழைய இயலவில்லை. இத்தகைய வளம் நிறைந்ததாகப் புகார் நகரின் தெருக்கள் விளங்கின.*

*"பெறற்கு அருந் தொல்சீர்த் துறக்கம் ஏய்க்கும்*
*பொய்யா மரபின் பூமலி பெருந்துறை (பட்டினப்பாலை 104 – 105)*

*என்று ஆசிரியர் கூறியிருப்பதை நோக்கும் போது வானுலக இன்பத்தை ஒத்த பெருமகிழ்ச்சியை இந்த வையம் அடைதல் வேண்டும் என்னும் பெரும்நோக்கம் உடையவர் என்பது விளங்கும். தமிழர்களின் பண்பாடுகள் பலவாக காணப்படினும் மொழி, பழக்கவழக்கங்கள், கலாச்சாரம் ஆகியன ஓர் இனத்தின் பன்முகத் தன்மையைப் பிரதிபலிக்கும் அடையாளங்களாகும். அவ்வகையில் தமிழனத்தின் தனித்த அடையாளங்களாக அமைந்தவை பட்டினப்பாலையில் இடம் பெற்றுள்ள பண்பாடுகளாகும்.*

*பார்வை நூல்கள்*


1. *டாக்டர் கு. மேகனராசு, இலக்கிய ஆய்வில் புதிய பார்வைகள், ஸ்டார் பிரசுரம், சென்னை – 5, 1987.*
2. *லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார், பத்துப்பாட்டு வளம், முத்தையா நிலையம், சென்னை – 84, 1976.*
3. *சாமி. சிதம்பரனார், பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும், அறிவுப் பதிப்பகம், சென்னை – 14, 2006.*
4. *ம.ரா.போ. குருசாமி, சங்கக்காலம், மெர்க்குரி புத்தக கம்பெனி, கோயம்பத்தூர்.*
5. *டாக்டர் இ. சுந்தரமூர்த்தி, இலக்கியமும் பண்பாடும், இன்ஸ்டிடியூட் ஆப் சவுத் இண்டியன் ஸ்டடீஸ், சென்னை – 2, 1994.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********